**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா.ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 30.10.2025

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்**
**நான் முதல்வன் திட்டத்தின் கீழ் மண்புழு உர உற்பத்தியாளர் பயிற்சி**

கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் பயிர் மேலாண்மை இயக்ககம், உழவியல் துறை, மத்திய பண்ணை பிரிவு சார்பில் தமிழக அரசின் வெற்றி நிச்சயம் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் "திறன் சார்ந்த மண்புழு உர உற்பத்தியாளர் (சிறிய பிரிவு) பயிற்சி" இன்று 25 பயனாளிகளுடன் தொடங்கப்பட்டது.

தொடக்க விழாவில் முனைவர் K. திருக்குமரன், பேராசிரியர் (உழவியல்) அவர்கள் வரவேற்புரை வழங்கினார். சிறப்புரையாக பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் R. கிருஷ்ணன் அவர்கள் அங்கக மேலாண்மையில் மண்புழு உரத்தின் முக்கியத்துவம் மற்றும் அதன் நன்மைகளை பற்றி விவரித்தார். மேலும் முனைவர் K. வையாபுரி, பேராசிரியர் (உழவியல்) அவர்கள் மண்புழு உரத்தை சந்தைப்படுத்துதல் பற்றி பயனாளிகளுக்கு எடுத்துரைத்தார். நிகழ்ச்சியின் நிறைவாக முனைவர் V. மணிவண்ணன் அவர்கள் நன்றியுரை வழங்கினார். இந்த திறன் மேம்பாட்டு பயிற்சி வரும் 26 நாட்களுக்கு நடைபெற உள்ளது. இந்த பயிற்சியில் மண்புழு உரத் தயாரிப்புக்கு தேவையான இடுபொருட்கள் மற்றும் உபகரணங்கள், பண்ணை கழிவுகளை சேகரித்தல் மற்றும் மக்க வைத்தல், உர தயாரிப்பு செயல்முறை, மண்புழு உரத்தொட்டி பராமரிப்பு, மண்புழு உரம் அறுவடை மற்றும் தரம் பிரித்தல், சந்தைப்படுத்துதல் போன்ற தொழில்நுட்பங்களை பற்றி வரும் நாட்களில் பயிற்சி கொடுக்கப்பட உள்ளது. இந்தப் பயிற்சியின் மூலம் பயனாளிகள், மண்புழு உர உற்பத்தியை ஒரு லாபகரமான சிறு தொழிலாக மாற்றி, தாங்களே சுயதொழில் முயற்சிகளை முன்னெடுக்கக் கூடிய திறனை பெறுவார்கள்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**